SNS academy
a fingerprint school
Sincerity, Nobility and Service

**TERMINAL EXAM I**
**TAMIL (II LANG)**

**Class:** 9 **Max Marks**: 80
**Date**: 30.7.19 **Time**: 3 hrs

**இக்கேள்வித் தாள் நான்கு பிரிவுகளைக் கொண்டது.**
**பிரிவு : அ படித்தல் - 15 மதிப்பெண்கள்**
**பிரிவு : ஆ எழுதுதல் - 14 மதிப்பெண்கள்**
**பிரிவு : இ இலக்கணம் - 15 மதிப்பெண்கள்**
**பிரிவு : ஈ இலக்கியம் / தமிழ்பாடநூல் - 36 மதிப்பெண்கள்**

---

- **எல்லா வினாக்களுக்கும் கட்டாயம் விடையளிக்கப்பட வேண்டும்.**
- **ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மதிப்பெண்கள் அதனதன் இடத்தில் குறிப்பிடப் பட்டுள்ளன.**

**பகுதி – அ**

**1. பின்வரும் பத்தியைப் படித்துப் பல்விடை வினாக்களுக்கு விடைதருக. 5**

இந்திய அளவில் நோக்கும் போது பட்டுத்துணிகள், கைத்தறியில் மட்டுமே அதிகமாக நெய்யப்படுகின்றன. தமிழகத்தில் காஞ்சிபுரம் பட்டு உலகப் பிரசித்தம் பெற்றது. தமிழகத்தில் காஞ்சிபுரம், ஆரணி, திருபுவனம், மதுரை, தஞ்சை போன்ற பெரும் நகரங்களில் பட்டு உற்பத்தியாகின்றது. தனியார் பட்டு உற்பத்தி மட்டுமன்றித் தமிழகத்தில் மொத்தம் 104 கூட்டுறவுப் பட்டு உற்பத்திச் சங்கங்களும் உள்ளன. காஞ்சிபுரத்தில் மட்டும் ஒரு மாதத்தில் ரூ.30.13 கோடி மதிப்புள்ள 72,000 மீட்டர் பட்டுத்துணி உற்பத்தியாகிறது. இதில் 80 விழுக்காடு அழகிய வேலைப்பாடு மிக்க கோர்வை முந்தியுடைய புடவை ரகங்கள். மீதமுள்ள 20 விழுக்காடு சால்வைகள் போன்ற மற்ற ரகங்களாகும். இந்த உயர் ரகப்பட்டுகளுக்கு அமெரிக்கா, வளைகுடா நாடுகள், ஜெர்மன், இங்கிலாந்து, சிங்கப்பூர், ஹாங்காங் போன்ற நாடுகளில் நல்ல வரவேற்புள்ளது. மொத்த ஏற்றுமதியில் 25 விழுக்காடு

அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு அனுப்பப்பட்டு வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

**வினாக்கள்**

i. பட்டு உற்பத்தியில் உலகப்பிரசித்தி பெற்ற ஊர் ___________.
   அ) சின்னாளம்  ஆ) மதுரை
   இ) காஞ்சிபுரம்  ஈ) கோயம்புத்தூர்

ii. பட்டு கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை யாது?
   அ) 107  ஆ) 104  இ) 204  ஈ) 106

iii. முந்தியுள்ள பட்டுப்புடவை ரகங்களின் விழுக்காடு ___________.
   அ) 30  ஆ) 60  இ) 20  ஈ) 80

iv. ஒரு மாதத்தில் உற்பத்தியாகும் பட்டுத் துணியின் நீளம் ________.
   அ) 72,000 மீட்டர்  ஆ) 74,000 மீட்டர்
   இ) 10,000 மீட்டர்  ஈ) 23,000 மீட்டர்

v. அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் பட்டுத் துணிகளின் விழுக்காடு _______
   அ) 80  ஆ) 40  இ) 25  ஈ) 30

**2. பின்வரும் பத்தியைப் படித்துப் பல்விடை வினாக்களுக்கு விடைதருக. 5**

ஒருநாள் இங்கிலாந்து நாட்டில், இரவீந்திரநாத் தாகூர், ஓர் ஏழை மனிதன் தெருவோரமாக நின்று கொண்டிருப்பதைப் பார்த்தார். அவன் அணிந்திருந்த காலணிகள் கிழிந்து, விரல்கள் வெளியில் தெரிந்து கொண்டிருந்தன. அந்தக் காலகட்டத்தில் பிச்சை எடுப்பது தடை செய்யப்பட்டிருந்தது. அதனால் அம்மனிதன் எதுவும் பேசாமல் தாகூரையே உற்று நோக்கிக் கொண்டிருந்தான். தாகூர் அம்மனிதன் மேல் பரிதாபப்பட்டு ஒரு தங்கநாணயத்தை அவனிடம் கொடுத்து விட்டு நகர்ந்தார். தாகூர் தவறுதலாக நாணயத்தைப் போட்டுவிட்டு செல்கிறார் என்று அந்த ஏழை மனிதன் நினைத்துக் கொண்டு, தாகூரிடம் நெருங்கி வந்து, நாணயத்தை மீண்டும் அவரிடமே திருப்பிக் கொடுத்தான். இதனைச் சற்றும் எதிர்பார்க்காத தாகூர் அம்மனிதனின் நேர்மையைக் கண்டு வியந்து போனார்.

**வினாக்கள்**

i. இரவீந்திரநாத் தாகூர் எந்த நாட்டிற்குச் சென்றார்?
   அ) போலந்து  ஆ) இங்கிலாந்து
   இ) பின்லாந்து  ஈ) ஹாலந்து

ii. தாகூர் அவர்கள் யாரைத் தெருவோரமாகக் கண்டார்?
   அ) ஒரு விதவைப் பெண்ணை   ஆ) ஒரு எளிய மனிதனை
   இ) ஒரு ஏழைப் பெண்ணை   ஈ) ஓர் ஏழை மனிதனை

iii. இங்கிலாந்தில் எது தடை செய்யப் பட்டிருந்தது?
   அ) தர்மம் போடுவது   ஆ) பிச்சை எடுப்பது
   இ) பணம் கொடுப்பது   ஈ) சோறு போடுவது

iv. தாகூர் அம்மனிதன் மேல் பரிதாபப் பட்டு என்ன கொடுத்தார்?
   அ) ஒரு தங்க பொற்கிழியை   ஆ) ஒரு தங்க பொற்காசை
   இ) ஒரு வெள்ளி நாணயத்தை   ஈ) ஒரு தங்க நாணயத்தை

v. ஏழை மனிதனின் எச்செயலினைக் கண்டு வியந்தார் தாகூர்?
   அ) வைராக்கியத்தைக் கண்டு   ஆ) நிதானத்தைக் கண்டு
   இ) பொறுமையைக் கண்டு   ஈ) நேர்மையைக் கண்டு

**3. மூன்றில் ஒரு பங்காக சுருக்கி எழுதுக. 5**

மனித இனத்திற்கு ஆண்டவன் வழங்கியுள்ள அருட்கொடைகளுள் தலையாயது அறிவு. மனிதனின் செயல்பாடுகள், கண்டுபிடிப்புகள் ஆற்றலின் வீச்சுகள் ஆகிய அனைத்துக்கும் ஆதாரமாய் அமைந்து அவனை இயக்கும் உந்து விசையாகப் பயன்படுவது அறிவு ஒன்றே! தொட்டனைத் தூறும் மணற்கேணியைப் போல் கற்க கற்க ஊறிப் பெருகுவது அறிவு. ‘வெள்ளத்தால் அழியாது, வெந்தணலால் வேகாது’ என்று புலவரால் போற்றப்படும் அறிவுச் செல்வம் என்றும் அழிவதே இல்லை. பிற செல்வங்கள் பிறருக்குக் கொடுத்தால் குறைந்து விடும். ஆனால் அறிவாகிய செல்வம் மட்டும் தான் பிறருக்குக் கொடுத்தாலும் குறையாது. ஒருவன் பிறருக்கு அறிவூட்டும் போது அவனது அறிவு மென்மேலும் சிறக்கிறது; தெளிவு படுகிறது. பிறதானங்களை விடவும் ‘வித்யாதானம்’ சிறந்தது என்று அறிஞர்கள் புகழ்வது இதனால் தான்.

## பகுதி – ஆ

**4.** நீ வாழும் பகுதியில் ஒரு மருத்துவமனை அமைத்துத் தரக் கோரி சுகாதாரத்துறை அமைச்சருக்கு ஒரு விண்ணப்பம் எழுதுக. **6**

**(அல்லது)**

உனது பள்ளியில் நடைப்பெற்ற விளையாட்டு தினவிழா குறித்து உனது நண்பனுக்கு ஒரு மடல் எழுதுக.

**கடிதங்களில் உனது பெயரும், முகவரியும் :** அமுதன் / அமுதா, எண்:20, கம்பர் தெரு, திருநகர் கிராமம், விழுப்புரம் மாவட்டம் – 23.

**5. பின்வரும் பகுதிகளில் ஏதேனும் ஒன்றில் கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக. 8**

i. முன்னுரை – ஒழுக்கத்தின் மேன்மை – ஒழுக்கத்தின் பண்புகள் – வாய்மையின் சிறப்பு – அரிச்சந்திரன் கதை – புற ஒழுக்கம் – முடிவுரை.

ii. முன்னுரை – உடற்கல்வி – அவற்றின் பயன்கள் – உடல் வலிமை – உயர்வுக்கு உறுதுணை – வாய்ப்புகள் – பாரதியின் அறிவுரை – முடிவுரை.

iii. முன்னுரை – நூல்கள் நம் நண்பர்கள் – நூல்களின் பயன் – நூலகங்களின் தேவை – நூலக அமைப்பு – பயன் படுத்தும் விதம் – நூலக வகைகள் – முடிவுரை.

## பகுதி – இ

**6. சான்று தருக. 3**

i. எழுவாய்

அ) சிங்கம் ஆ) விரட்டியது
இ) போல ஈ) ஓடினான்

ii. வல்லினம் மிகுதல்

அ) தமிழ் + படி ஆ) பூ + பந்தல்
இ) மூன்று + கோடி ஈ) பார்த்த + பையன்

iii. பெயர்ச்சொல்

அ) ஐந்து ஆ) தவ இ) போல ஈ) வந்தான்

**7. நிரப்புக. 3**

i. முதல் எழுத்துகளைச் சார்ந்து இயங்கும் எழுத்துகள் _____ எனப்படும்.

அ) உயிர் எழுத்துகள் ஆ) மெய் எழுத்துகள்
இ) சார்பெழுத்துகள் ஈ) ஆய்த எழுத்து

ii. சொல் __________ வகைப்படும்

அ) நான்கு ஆ) ஐந்து
இ) பன்னிரண்டு ஈ) பதினாறு

iii. மனிதனையும் விலங்குகளையும் ___________ மொழியாகும்.

அ) வேறுபடுத்துவது ஆ) அமைதிபடுத்துவது
இ) துன்பப் படுத்துவது ஈ) இன்பப் படுத்துவது

**8. கூறியவாறு செய்க.** **3**

i. பாடினான். (எழுவாய் தொடராக்குக)

அ) பாடச்செய்தான் ஆ) பாடுவித்தான்

இ) பாடவில்லை ஈ) கண்ணன் பாடினான்

ii. கண்டான் (வகையறிக)

அ) பெயர்ச்சொல் ஆ) இடைச்சொல்

இ) வினைச்சொல் ஈ) உரிச்சொல்

iii. நேற்று வருவேன் ( பிழை நீக்குக )

அ) நேற்று வருகின்றேன் ஆ) நேற்று வந்தேன்

இ) நேற்று வரும் ஈ) நேற்று வந்தார்

**9. இலக்கணக் குறிப்புத் தருக.** **3**

i. உதடுகள் சேர்வதால் பிறக்கும் எழுத்துகள்

அ) ப்,ம் ஆ) ய்,வ் இ) அ,ஆ ஈ) உ,ஊ

ii. கற்கோட்டை

அ) இயல்புப் புணர்ச்சி ஆ) தோன்றல் விகாரம்

இ) திரிதல் விகாரம் ஈ) கெடுதல் விகாரம்

iii. ஓரெழுத்தொருமொழி

அ) கூட ஆ) படித்தான் இ) மரம் ஈ) மா

**10. சரியான சொற்றொடரைத் தேர்ந்து எழுதுக.** **3**

i. அ) ஆசிரியர் பாடம் நடத்தினார் என்பது செய்வினை.

ஆ) ஆசிரியர் பாடம் நடத்தினார் என்பதுசெயப்பாட்டு வினை.

இ) ஆசிரியர் பாடம் நடத்தினார் என்பது எழுவாய்.

ஈ) ஆசிரியர் பாடம் நடத்தினார் என்பது பயனிலை.

**ii.** அ) சொற்றொடர் எழுவதற்கு அடிப்படையாக அமைந்த பெயர்ச்சொல் பயனிலை எனப்படும்.

ஆ) சொற்றொடர் எழுவதற்கு அடிப்படையாக அமைந்த பெயர்ச்சொல் செயப்படு பொருள் எனப்படும்

இ) சொற்றொடர் எழுவதற்கு அடிப்படையாக அமைந்த பெயர்ச்சொல் எழுவாய் எனப்படும்

ஈ) சொற்றொடர் எழுவதற்கு அடிப்படையாக அமைந்த பெயர்ச்சொல் பெயர் எனப்படும்.

**iii.** அ) தமிழில் ஏறத்தாழ 40 துணைவினைகள் உள்ளன.
ஆ) தமிழில் ஏறத்தாழ 45 துணைவினைகள் உள்ளன.
இ) தமிழில் ஏறத்தாழ 30 துணைவினைகள் உள்ளன.
ஈ) தமிழில் ஏறத்தாழ 50 துணைவினைகள் உள்ளன.

### பகுதி – ஈ

**11. பின்வரும் உரைநடைப் பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடைதருக. 5**

தொலைநகல் இயந்திரம் கோப்புகளையும் ஒளிப்படங்களையும் உடனடியாக ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு அனுப்பப் பயன்படுகிறது.1846இல் ஸ்காட்லாந்துக் கண்டுபிடிப்பாளர் அலெக்சாண்டர் பெயின் என்பார் குறியீடுகளை மின்னாற்றல் உதவியுடன் அச்சிடுவதில் வெற்றிகண்டு அதற்குரிய காப்புரிமையைப் பெற்றார். இத்தாலி நாட்டு இயற்பியல் அறிஞர் ஜியோவான்னி காசில்லி, பான்டெலிகிராஃப் என்ற தொலைநகல் கருவியை உருவாக்கினார். அவருடைய கண்டுபிடிப்பைக் கொண்டு, 1865இல் பாரிஸ் நகரிலிருந்து லியான் நகரத்துக்குத் தொலைநகல் சேவை தொடங்கப்பட்டது.

**வினாக்கள்:**

i. தொலைநகல் எதற்குப் பயன்படுகிறது?
ii. அலெக்சாண்டர் பெயின் எதனைக் கண்டுபிடித்தார்?
iii. ஜியோவான்னி காசில்லி எந்த நாட்டைச் சேர்ந்தவர்?
iv. பாரிஸ் நகரிலிருந்து லியான் நகரத்துக்குத் தொலைநகல் சேவை தொடங்கப்பட்ட ஆண்டு எது?
v. பத்திக்கு ஏற்ற தலைப்பு தருக.

**12. பின்வரும் செய்யுள் பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடைதருக. 4**

அரிதரு செந்நெற் சூட்டின் அடுக்கிய அடுக்கல் சேர்ப்பார்
பரிவுறத் தடிந்த பன்மீன் படர்நெடுங் குன்று செய்வார்
சுரிவளை சொரிந்த முத்தின் சுடர்ப் பெரும் பொருப்பு யாப்பர்
விரிமலர் கற்றை வேரி பொழிந்திழி வெற்பு வைப்பார்.

**வினாக்கள்**

i. இப்பாடல் இடம் பெற்ற நூல் எது?
அ) தமிழ் விடு தூது ஆ) பெரிய புராணம்
இ) தமிழோவியம் ஈ) புறநானூறு

ii. இப்பாடல் ஆசிரியர் யார்?
அ) சேக்கிழார்
ஆ) ஆசிரியர் தெரியவில்லை
இ) குடபுலவியனார்
ஈ) தமிழன்பன்

iii. 'சுரிவளை' என்பதன் பொருள் யாது?
அ) தேன் ஆ) சங்கு
இ) முத்து ஈ) தங்கம்

iv. செந்நெல் – பிரித்து எழுதுக.
அ) செந் + நெல் ஆ) செம்மை + நெல்
இ) சிவப்பு + நெல் ஈ) சிவந்த + நெல்

**13. விடுபட்ட சீர்களை எழுதுக. 2**

i. மிகுதியான் __________செய்தாரைத் தாம்தம்
தகுதியான் _________ விடல்.

ii. பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் ________
கருமமே _________ கல்.

**14. எவையேனும் இரண்டு செய்யுள் வினாக்களுக்கு விடைதருக. 8**

i. 'என் சமகாலத் தோழர்களே' கவிதையில் கவிஞர் விடுக்கும் வேண்டுகோள் யாது?
ii. இந்திரவிழா நிகழ்வுகளை விவரிக்க.
iii. பட்ட மரத்தின் வருத்தங்கள் யாவை?
iv. புதுக்கோலம் புனைந்து தமிழ் வளர்ப்பாய் – உங்கள் பங்கினைக் குறிப்பிடுக.

**15. எவையேனும் இரண்டு உரைநடை வினாக்களுக்கு விடைதருக.**

i. திராவிட மொழிகளின் ஒப்பியல் ஆய்விற்குத் தமிழே பெருந்துணையாக இருக்கிறது என்பதை எடுத்துகாட்டுகளுடன் விவரிக்க. **10**
ii. அடுத்த தலைமுறைக்கும் தண்ணீர் தேவை – அதற்கு நாம் செய்யவேண்டியவற்றை எழுதுக.
iii. ஏறுதழுவுதல் தமிழரின் அறச்செயல் என்று போற்றப்படுவதற்கான காரணங்கள் யாவை?
iv. அன்றாட வாழ்வில் பயன்படும் இரண்டு இணைய வழிச்சேவைகள் குறித்து விளக்குக.

**16. ஏதேனும் ஒரு தலைப்பில் துணைப்பாடக் கட்டுரை எழுதுக. 7**

i. தண்ணீர் கதையை கட்டுரை வடிவில் எழுதுக.

ii. தமிழ் வளரும் செல்வம் என்பதனைக் கட்டுரை வடிவில் விளக்குக.

**iii.** அகழாய்வுகள் துணைப்பாடத்தை கட்டுரை வடிவில் எழுதுக.